2018 ஜூலை 4]

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லாம் list–ஐ பார்த்துத்தான் allow செய்கிறேன். (குறுக்கீடுகள்) நான் ஒன்றும் தவறாகச் சொல்லமாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் தவறாகப் பேசாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லாவற்றையும் நான் பார்த்துவிட்டுத்தான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) பார்த்துவிட்டுத்தான் நான் அடுத்த கேள்விக்குச் செல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னை உங்கள் சௌகரியத்திற்குப் பேசாதீர்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை என்பதற்காக எப்படி வேண்டுமானாலும் பேச வேண்டாம்.

வினா வரிசை எண் 264, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

264—

சாலையைச் சீரமைத்தல்

***6170—திரு. கே. பழனி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, வல்லக்கோட்டை முதல் மேட்டுப்பாளையம் வரையுள்ள சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், வல்லக்கோட்டை முதல் மேட்டுப்பாளையம் வரையுள்ள சாலை, 2017–2018 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தார்ச் சாலையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உத்தரவிற்கிணங்க அமைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.

திரு. கே. பழனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், எங்கள் இதய தெய்வம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், 1½ கோடி தொண்டர்களின் ஒப்பற்ற தலைவர், எங்களை வளர்த்து ஆளாக்கிய இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மக்கள் தலைவர், மாபெரும் சக்தி படைத்த தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லக்கோட்டை முதல் மேட்டுப்பாளையம் வரையுள்ள 3 கிலோ மீட்டர் சாலை போடப்பட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, தாம்பரம்–ஸ்ரீபெரும்புதூர் சாலையில் மலைப்பட்டு–மாங்கன்யம்–அழகூர் இணைப்புச் சாலை 4 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. அந்தச் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தர மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, நன்றி கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட சாலை, ஊராட்சி சாலையா அல்லது பேரூராட்சிக்குட்பட்டதா அல்லது நகராட்சிக்குட்பட்டதா என்று தெரியவில்லை. ஊராட்சி சாலையைப் பொறுத்தவரை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும்போதே பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

2018 ஜூலை 4]

அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை குறித்து, துறை அதிகாரிகளோடு ஆய்வு செய்து, தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் அல்லது நபார்டு போன்ற ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் கண்டிப்பாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி அவர்கள்.*

திரு. கே. பழனி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நான் சொன்ன கோரிக்கையை ஏற்று, அதை ஆய்வு செய்து, ஏற்பாடு செய்து தரப்படும் என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, தேவமுத்தூர்—சென்னை சாலையில் 5 கிலோ மீட்டர் தூரம் உள்ள பெண்ணாலூர் ஊராட்சி சாலை மிக மோசமான நிலையில் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து, அதை தார்ச் சாலையாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை பழுதடைந்த சாலையாக இருப்பின், துறை அதிகாரிகளோடு ஆய்வு செய்து, வருகின்ற காலத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய பரிசீலனைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி அவர்கள்.*

திருமதி பெ. சீத்தாபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதிக்குட்பட்ட திண்டிவனம் நகராட்சியில் உள்ள இந்திரா காந்தி பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக*

அமைத்துத் தர வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. காரணம், கிடங்கல் 1, கோட்டைமேடு, பூதேரி நகரப் பகுதி மற்றும் சிங்கனூர் கிராமப் பகுதியிலுள்ள ஏறக்குறைய 10,000 மக்களின் பயன்பாட்டிற்குரிய பாதை இது. பள்ளி செல்லும் மாணவர்களும் இந்தப் பாதையைத்தான் பயன்படுத்துகின்றனர். மழைக் காலங்களில் இப்பகுதி வெள்ள பாதிப்புக்குள்ளாகிறது. இதனால் இப்பகுதி மக்கள் 4 கிலோ மீட்டர் தூரம் சுற்றி செல்வதால், சிரமத்திற்குள்ளாகின்றனர். மழைக் காலங்களில் இப்பகுதி தீவு போல் ஆகிவிடுகிறது. எனவே, இங்குள்ள தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக தரமுயர்த்த வேண்டுமென்பது பொதுமக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக உள்ளது. இப்பகுதியில் பிரசித்தி பெற்ற கோயில் உள்ளது. அதுமட்டுமின்றி பூதேரி பகுதி, அடித்தட்டு ஏழையெளிய விவசாயிகள் வாழக்கூடிய பகுதி. விவசாயிகளின் விளைபொருட்களை எடுத்துச்செல்ல இந்தப் பாதை மிகவும் பயனுள்ளதாக அமையும் என்பதால், பழைய தரைப் பாலத்தை, உயர்மட்டப் பாலமாக தரமுயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011—ல் மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்றதற்குப் பின், அதிகமான பாலங்கள் ஊராட்சிகளில் கட்டப்பட்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தொடர்ந்து பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பாலம் மிகவும் அவசியமான பாலம் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆகவே, வருகின்ற காலத்திலே தமிழ்நாடு ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், நபார்டு அல்லது பாரத பிரதம மந்திரி சாலை அமைக்கும் திட்டம் இவற்றில் ஏதாவது ஒரு திட்டத்திலே இதனைச் சேர்த்து, துறை அதிகாரிகளால் ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*